**தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் - 2013**

---

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைசாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந்திகதிய 2217 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 6 ஆம் பட்டோலையின் 34 ஆம் பிரிவிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி**

---

கடன் உடன்படிக்கையின்படி, அப்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சான (எம்ஓஎச்) தற்போதைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு (எம்ஓஎச்பி&எஸ்) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை வினைத்திறனுடன் முன்னேற்றுதல் மற்றும் வீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலும் செயற்திட்டமானது,

(i) வீதித்துறை நிறுவனங்களை முன்னேற்றுதல்,

(ii) செயற்திட்ட வீதிகளை தரமுயர்த்தல், மற்றும்

(iii) முன்னோடி செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும் என்பனவாகும்.

கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,181 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 208 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,275 மில்லினிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2008 பெப்ரவரி 15 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்று (எம்ஓயூ) கைசாத்திடப்பட்டதுடன் இதன்படி மூல கடன் தொகைக்குள் செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மாற்றுவதற்கு 2008 மே 27 இல் கடன் உடன்படிக்கை திருத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட கடனிற்கு மேலதிகமாக, 2010 ஒக்தோபர் 04 இல் பொருளாதார அபிவிருத்திக்கான (ஓஎவ்ஐடி) பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் (ஓபெக்) நிதிய தாபனத்துடன் இலங்கை அரசாங்கத்தால் 1355 பி ஆம் இலக்க கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் ஓஎவ்ஐடி ஆல் ரூபா 880 மில்லயனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8 மில்லியன் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ரூபா 9,350 மில்லயனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியனை ஒதுக்குவதற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் 2011 ஒக்தோபர் 04 இல் 2767 –எஸ்ஆர்ஐ ஆம் இலக்க குறைநிரப்பு கடன் உடன்படிக்கையும் கைசாத்திடப்பட்டிருந்தது. குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளிற்காக 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆரம்ப கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்ட நடவடிக்கைகள் 2006 ஏப்ரல் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கபட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. ஓஎவ்ஐடி இன் நிதியளிப்பு நடவடிக்கைகள் 2015 யூன் 30 அளவில் மூடப்பட வேண்டும். எவ்வாறாயினும் குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொண்ட நடவடிக்கைகள் 2016 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர்கள் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிசார் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,607 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 25,322 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் - கிரயத்தில் | - | 582,942 | 942,881 |
| பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் | | | |
| வேலைகள் | 21,301,740,878 | - | 21,301,740,878 |
| ஆலோசனை | 860,175,817 | | 860,175,817 |
| காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற கிரயம் | 1,157,219,220 | | 1,157,219,220 |
| செயற்திட்ட முகாமைத்துவம் செலவினம் | 945,757 | 62,242,975 | 364,907,493 |
| நெடுஞ்சாலைகள் தரமுயர்த்தல் | | | |
| * காணிச் சுவீகரிப்பு | (1,123,676,454) | (455,502,746) | 1,031,098,732 |
| * சிவில் வேலைகள் | (20,727,048,132) | 4,936,067,684 | - |
| * நிர்மாண மேற்பார்வை | (860,175,817) | 72,977,250 | - |
| நெடுஞ்சாலைகள் செயலகத்தின் நிர்மாணம் | 408,988,696 | 741,893,462 | 1,638,671,863 |
| செயலாற்றல் அடிப்படை | - | 78,863,519 | - |

| | | | |
|---|---|---|---|
| பராமரிப்பு | | | |
| நிதிக் கட்டணங்கள் | - | 162,340,389 | - |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 588,601,674 | (1,438,491,103) | (1,014,243,559) |
| மொத்தம் | **1,606,771,638** | **4,160,974,372** | **25,321,914,324** |

* குறிப்பு: பூர்த்தியாக்கப்பட்ட சிவில் வேலைகளிற்கு நடைபெறும் வேலைகள் மாற்றப்பட்டிருந்ததுடன் எதிர்மறை மீதியில் விளைந்திருந்தன.

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஐசீபீ-01 ஆம் இலக்க ஒப்பந்தத்தின் கீழ் புத்தளம்- திருகோணமலை வீதியின் புத்தளம் முதல் நொச்சியாகம வரையான பிரிவின் புனரமைப்பின் இறுதிப் பட்டியலின் படி, நிலுவையாகவிருந்த மீதி ரூபா 3,558,841 ஆகும். அதேநேரம் செயற்திட்டத்தின் செலுத்த வேண்டிய கணக்கின் படி மீதி ரூபா 10,022,023ஆக காட்டப்பட்டிருந்தது. செயற்திட்டமானது கணக்கில் உள்ள ரூபா 6,463,182 ஆன வித்தியாசத்தை இணக்கம் செயதிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

கடன் உடன்படிக்கையின்படி, 270 கிமீ நீளமான ஐந்து தேசிய வீதிகளின் முன்னேற்றம் மற்றும் புனரமைப்புகள் மற்றும் நெடுஞ்சாலைகள் செயலகத்திற்கான கட்டிட நிர்மாணம் மற்றும் செயலாற்றல் அடிப்படையான வீதிப் பராமரிப்பு மீதான முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினை மேற்கொள்வதற்கு ஐ.அ.டொலர் 158 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஓஎவ்ஐடி என்பன ஒதுக்கியிருந்தன. 2008 மே 27 இல் செய்யப்பட்ட திருத்தங்களின்படி, வேலையின் நோக்கெல்லை மூல ஒதுக்கீட்டிற்குள் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, ஒவ்வொரு கூறின் கீழான கடனளிக்கும் முகவர்களால் ஒதுக்கப்பட்ட நிதிகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவற்றின் பயன்பாடு என்பன கீழே தரப்படுகின்றன.

| நடவடிக்கைகள் | **செய்யப்பட்ட ஒதுக்கீடுகள்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்படுத்தப்பட்ட/ பணவளிப்புச் செய்யப்பட்ட தொகைகள்** | | |
|---|---|---|---|---|---|
| | **ஏடிபி** | **ஓஎவ்ஐடி** | **வெளிநாட்டுக் கடன்கள்** | | **இலங்கை அரசாங்கம்** |
| | **ஐ.அ.டொலர் (000)** | **ஐ.அ.டொலர் (000)** | **ஐ.அ.டொலர் (000)** | **ரூபா. (000)** | **ரூபா. (000)** |
| சிவில் வேலைகள் | | | | | |
| - வீதி தரமுயர்த்தல் | 125,359 | 8,000 | 133,359 | 15,325,817 | 4,234,873 |
| - செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு | 2,514 | - | 2,514 | 288,675 | 34,995 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - கட்டிட நிர்மாணம் | 8,535 | - | 8,535 | 1,026,148 | 402,712 |
| காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம் | - | - | - | - | 2,188,318 |
| ஆலோசனை சேவைகள் | | | | | |
| - நிறுவனரீதியான மற்றும் கொள்கை ஆதரவு | 273 | - | 273 | 31,058 | - |
| - நிர்மாண மேற்பார்வை | 6,441 | - | 6,441 | 728,151 | 106,389 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 1,875 | - | 1,875 | 214,949 | 153,880 |
| வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் | 5,003 | - | 5,003 | 585,949 | - |
| மொத்தம் | 150,000 | 8,000 | 158,000 | 18,200,747 | 7,121,167 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிப்பு முகவர்களால் ஒதுக்கப்பட்ட ரூபா 18,201 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 158 மில்லியன் தொகையான நிதிகள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் தரப்பட்ட தகவல்களின் படி, சகல ஐந்து தேசிய வீதிகளின் முன்னேற்ற மற்றும் பனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய ஒப்பந்தகாரர்களால் கையளிக்கப்பட்டிருந்தன.

## 6.2. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நெடுஞ்சாலைகள் செயலக கட்டிட நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் கட்டிடத்தின் எட்டு மட்டங்களில், முதலாவது மூன்று மட்டங்களை பூர்த்தியாக்குவதற்காக 2010 ஆகஸ்ட் 17 இல் ரூபா 599.30 மில்லியன் கிரயத்தில் தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் 04 இற்கு முன்னர் முதலாவது மூன்று மட்டங்களின் நிர்மாணத்தை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய நிர்மாண வேலைகளின் 90 சதவீதம் பூத்தியாக்கிய காலத்தில், செயற்திட்ட முகாமைத்துவ அலகு முதலாவது ஒப்பந்தத்திற்கு செய்யப்பட்ட முரணாக ரூபா 568.14 மில்லியன் மேலதிக கிரயத்தில் அதே ஒப்பந்தகாரருக்கு ஏனைய ஐந்து மட்டங்களின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 2011 திசெம்பரில் நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், செயற்திட்ட முகாமைத்துவ அலகு ரூபா 795.72 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேலும் இரண்டு மட்டங்களினால் கட்டிடத்தை விரிவாக்குவதற்காக 2012 யூன் மாதத்தில் தீர்மானித்தது. ஆகவே, பத்து மட்டங்களை கொண்டுள்ள கட்டிடத்தின் மொத்த எதிர்பார்க்கப்பட்ட கிரயம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,963.17 மில்லியனாக இருந்தது. முதலாவது முரணிற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் உள்ளூர் நிதிகளிலிருந்து மேலதிக கிரயம் செய்வதற்காக 2013 யூலை 11 இல் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி மாதத்திற்கான ஆலோசனையாளரின் முன்னேற்ற அறிக்கையின்படி, கட்டிடத்தின் சகல பத்து மட்டங்களின் வேலைகள் பெருமளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.3.2. மற்றும் 8.13.4 ஆம் பந்திகளின் பிரகாரம், மேலும் இரண்டு மட்டங்களை விரிவாக்குவதற்கான நோக்கெல்லை வித்தியாசத்திற்கு அங்கீகாரம்

பெறப்பட்டிருக்காததுடன் அவற்றின் கிரயம் மற்றும் காலநீடிப்பு என்பன வழங்கப்பட்டிருந்தன. மேலும், ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளை தொடருவதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகுடன் பரஸ்பரம் உடன்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட அவற்றின் மீது எழுத்துமூல உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தகாரர்களால் 2012 திசெம்பர் முதல் 2013 மே மாதம் வரை ரூபா 242.70 மில்லியனிற்காக பட்டியல்களைச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பட்டியல்கள் 2013 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இத் தாமதம் அடுத்துவரும் ஆண்டில் ஒப்பந்தகாரருக்கு வட்டி கொடுப்பதில் விளையும்.

(இ) ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட குறித்த நிபந்தனையின் படி, ஒப்பந்தகாரர் மேந்தலை கிரயத்தில் 15 சதவீத இலாப எல்லையை நிர்ணயிப்பதற்கு உடன்பட்டிருந்தார். எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் 25 சதவீத இலாப எல்லை மேற்குறிப்பிட்ட நிபந்தனைக்கு முரணாக கொரப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஒப்பந்தகாரரின் 2012 நவம்பர் 17 ஆந் திகதிய சீ/369/10/எச்எஸ்பீ-எச்ஓ/2013 அம் இலக்க கடிதத்தின் பிரகாரம், நிர்மாணத்தின் கட்டம்-3 இற்காக உடன்பட்ட தொகையைவிட மேலதிக தொகை கோருவதற்கு உடன்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 6.14 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான மேலதிக தொகை வேலைத்தளத்தில் இருந்த தொழிலாளர்கள் மற்றும் பொருட்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் போன்றவற்றிற்காக கோரப்பட்டிருந்ததுடன் அதன்படி செலுத்தப்பட்டிருந்தன.

(உ) நிர்மாண வேலைகளின் நோக்கெல்லையின் வழமையான மாற்றங்கள் ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட கோரிக்கைக்காக வித்தியாசமான வீதங்களை பிரயோகிப்பதற்கான வாய்ப்பை வழங்கியிருந்தது. ஆகவே, நிர்மாணத்தின் கட்டம் -3 இன் மேலதிக வேலைகளிற்காக பிரயோகிக்கப்பட்ட 13 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சுடைய வித்தியாசங்கள் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஊ) கார் தரிப்பிடத்திற்கான இடம் கட்டிடத்திற்குள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்காததுடன் மேலதிக இடம் கோரவேண்டியிருந்தது. மேலும், அந்நோக்கத்திற்காக மேலதிகக் கிரயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(எ) கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பத்தில் 2012 நவம்பர் 30 அல்லது அதற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் இது மேலதிக இரண்டு மட்டங்களின் பூர்த்தியாக்கலிற்காக காலம் அனுமதிப்பதன் மூலம் 2014 நவம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2014 பெப்ரவரி இறுதியில் உள்ளவாறு அத்தகைய வேலைகளின் பௌதீக முன்னேற்றம் சராசரி 60 சதவீதத்தில் இருந்தது. ஒப்பந்தகாரர் உரிய திகதிகளில் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு இயலக்கூடியவாறு போதிய தொழிலாளர் மற்றும் உபகரணங்களை வேலைக்கமர்த்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைத் தளம்பலிற்காக ரூபா 59.54 மில்லியன் தொகையான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

## 7. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 35 பதவியணி நிலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவறு செயற்திட்ட அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் 21 உறுப்பினர்களைக்

கொண்டிருந்தது. எவ்வாறாயினும், 03 சிரேஸ்ட பொறியியலாளர்கள், 01 பெறியியலாளர் (பாலங்கள் வடிவமைப்பு) போன்ற அத்தகைய பிரதான பதவிகள் உள்ளடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள பதவிகளிற்காக 14 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் நிரப்பப்படாது இருந்தன. மேலும், 02 ஆலோசனையாளர்கள், 02 எழுதுனர்கள் மற்றும் ஒரு முறைமை பகுப்பாய்வாளர் உள்ளடங்கலாக 07 ஊழியர்ககள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத பதவிகளிற்காக செயற்திட்டத்தால் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 3,158,130 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 5 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் 2.2.4 ஆம் பிரிவின்படி, செயற்திட்ட பிரதான பதவியணி உள்ளடங்கலான சகல பதவிகளிற்குமான நியமனங்கள் திறந்த விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்களை கோரி நேர்முகப் பரீட்சைகள் பின்பற்றப்பட்ட பின்னரே செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டம் அத்தகைய நடைமுறைகளை பிரயோகித்திருக்கவில்லை.

(இ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 2.2.7 ஆம் பிரிவின் படி, சகல நியமனங்களும் திருப்திகரமான செயலாற்றலிற்கு உட்படுத்தி வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய ஆகக் கூடிய மூன்று ஆண்டுகள் காலம் ஒன்றிற்காக ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 34 பதவியணி உறுப்பினர்கள் மேற்குறிப்பிட்ட வேண்டுகைக்கு முரணாக தற்காலிக அடிப்படையில் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மேலும் வழமையாக, செயற்திட்டம் அனுமதித்திருந்த அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களை சேர்த்திருந்ததுடன் செயற்திட்டத்தின் கீழ் அவர்களிற்கு நிதி மற்றும் ஏனைய நலன்கள் தொடரும் நோக்கில் வேறு செயற்திட்டங்களிற்கு அவர்களை விடுவித்திருந்தது.

(ஈ) செயற்திட்டமானது மேந்தலை செலவினம், பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி போன்ற அத்தகைய மேலதிக செலவினத்திற்காக முறையே ரூபா 420,903, ரூபா 51,539 மற்றும் ரூபா 8,590 தொகைகளை அவர்களிற்கு செய்யப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவுகளின் சார்பில் செலுத்தியிருந்தது.